# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8035267

1. District : மாவட்டம் : கடலூர் | PS: காவல்நிலையம் : ஊ.த.த.கண்காணிப்பு | Year: ஆண்டு : 2018 | FIR No.: மு.த.அ. எண் : 1/2018 | Date: நாள் : 05.01.2018

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு கடலூர் — Sections பிரிவுகள்: 7, 13(2) r/w 13(1)(d)
   (ii) Act சட்டம்: PC Act, 1988 — Sections பிரிவுகள்: —
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் : 5.1.18 மதியம் — Date to : நாள் வரை : 5.1.18 மாலை
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் : 16.30 மணி — Time to : நேரம் வரை : 16.00 மணி
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 5.1.18 — Time : நேரம் : 22.00
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : நேரில் வந்து எழுத்து மூலம் கொடுக்கப்பட்ட புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியகம், கடலூர் கிழக்கு 500 மீட்டர் வடக்கு
   Beat Number : முறைக் காவல் எண் : — (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் : —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : R. கீதா — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : —
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : — (d) Nationality : நாட்டினம் : இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் : 5.1.18 — Place of Issue : வழங்கப்பட்ட இடம் : ஊ.த.த பிரிவு, கடலூர்
   (f) Occupation : தொழில் : இளநிலை உதவியாளர் பிற்பட்டோர் நல அலுவலகம், கடலூர் (ம) சிறுபான்மையினர் மாவட்டம், கடலூர் — (g) Address : முகவரி : பிற்பட்டோர் நல அலுவலகம், கடலூர் மற்றும் சிறுபான்மையினர் மாவட்டம், கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) ராஜு (ஏ) ராஜேஷ், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகம், மாவட்ட ஆட்சியகம், கடலூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   வாகன தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 05.01.2018 ந்தேதி இரவு 22.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, திருமதி.R.கீதா, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு, அனுப்புநர் R.கீதா, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். நாள் : 05.01.2018 பொருள் : திடீர் ஆய்வு சோதனை – திருமதி.ரதி (எ) லட்சுமி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், கடலூர் – கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ஒப்படைப்பு – புகார் மனு – நடவடிக்கை எடுக்க வேண்டி – சம்மந்தமாக. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் என்ற முறையில், துணை ஆய்வுக்குழு அலுவலரான R.கீதா ஆகிய நான் எனது அலுவலகத்தில் இருக்கும் போது எனக்கு கிடைத்த தகவலான கடலூர் மாவட்டம், விருத்தாசலம் கோட்டத்தை சேர்ந்த ஆதிதிராவிட மாணவர் விடுதி காப்பாளர்கள் இன்று 05.01.2018 கடலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரான திருமதி.ரதி (எ) லட்சுமி என்பவரை 2018 வருட புத்தாண்டு சம்மந்தமாக கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இரண்டாவது தளத்தில் இருக்கும் அறை எண். 319 ல் உள்ள கடலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் அரசு ஆதிதிராவிடர் விடுதி காப்பாளர்கள் இன்று 05.01.2018 ந்தேதி மதியம் லஞ்சமாக பணம் கொடுக்க இருப்பதாக கிடைத்த தகவலை பெற்று, உடனடியாக நான், கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் M.சதீஷ் அவர்களுக்கு தகவல் கொடுத்தேன். அதன் அடிப்படையில் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் M.சதீஷ் அவர்கள் எனது அலுவலகத்திற்கு இன்று 05.01.2018 ந்தேதி பகல் 11.00 மணிக்கு வருகை தந்தார். பின்னர் நானும் ஆய்வாளர் அவர்களும் எனது அலுவலகத்தில் எனக்கு கிடைத்த மேற்படி தகவல் சம்மந்தமாக 12.00 மணி வரை ஆலோசனை செய்தோம். பின்னர் சிறிது நேரம் கழித்து ஆய்வாளர் கொடுத்த தகவலின் அடிப்படையில்

(Continued in separate sheet)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் [illegible]...... பதவி [illegible] நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[illegible] 5/1/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
5.1.2018, இரவு 23.00 மணி

Name: பெயர் [illegible]
Rank: நிலை ..................No. எண் ..........
[illegible]

* GCP-240-34(Type 2) 90,000 Cps 21.3.16(HCL-12)p.2

கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவலர்கள் எனது அலுவலகத்திற்கு வந்தார்கள். பின்னர் சுமார் 12.45 மணியளவில் நானும், ஆய்வாளரும் மற்றும் இதர காவலர்களும் யாருக்கும் சந்தேகம் ஏற்படாத வகையில் கடலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தை கண்காணித்தோம். மேற்படி கண்காணிப்பின் போது மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி. ரதி (எ) லட்சுமி என்பவர் அலுவலகத்தில் இருப்பது உறுதி செய்யப்பட்டது. பின்னர் சுமார் 13.10 மணியளவில் மேற்படி அலுவலகத்திற்கு வருகை தந்த மூன்று நபர்கள் மேற்படி அலுவலக வாசலுக்கு வெளியே நின்று பேசி கொண்டிருந்தார்கள். அதில் ஒருவர் விடுதி சம்மந்தமாக சந்திக்க வந்துள்ளதாக மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி. ரதி (எ) லட்சுமி அவர்களின் அலுவலக அறைக்கு உள்ளே சென்று கூறுமாறு பேசிவிட்டு ஒருவரை உள்ளே அனுப்பி வைத்தனர். மேற்படி நபர்களுக்கு அருகில் இருந்த எனக்கு அவர்கள் பேசியதை கேட்டதில் இருந்து மூன்று நபர்களும் விடுதி காப்பாளர்கள் என்றும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி. ரதி (எ) லட்சுமி அவர்களை சந்திக்க வந்துள்ளதை, அவர்கள் பேசியதில் இருந்து தெரிந்து கொண்டு ஆய்வாளரிடம் தகவல் தெரிவித்தேன். பின்னர் நானும் ஆய்வாளரும் ஆலோசனை செய்து, மேற்கண்ட மூன்று நபர்களும் அலுவலகத்திற்கு உள்ளே சென்று வெளியே வரும் வரை காத்திருந்தோம். பின்னர் சுமார் 14.00 மணியளவில் மேற்கண்ட விடுதி காப்பாளர்கள் திருமதி. ரதி (எ) லட்சுமி அவர்களை சந்தித்து வெளியே வந்த மூன்று நபர்களை, என்னுடன் இருந்த ஆய்வாளர் விசாரணைக்காக பக்கத்தில் இருந்த அறைக்கு அழைத்து சென்றார், நானும் உடன் சென்றேன். பின்னர் நான் அவர்களை விசாரணை செய்த போது, தாங்கள் விருத்தாசலம் கோட்டத்தை சேர்ந்த ஆதிதிராவிடர் அரசு மாணவர் விடுதி காப்பாளர்கள் என்றும், கடந்த மாதம் விருத்தாசலம் கோட்டத்தில் உள்ள 27 விடுதிகளுக்கு மாணவர்களுக்காக வழங்கப்பட்ட செலவு தொகையில் சிறிது தொகையான ரூ.35,000/–த்தை புத்தாண்டு தினத்தன்று தற்போது மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி. ரதி (எ) லட்சுமி அவர்களிடம் லஞ்சமாக கொடுத்துள்ளதாக கூறினார்கள். பின்னர் நானும் ஆய்வாளரும் மேற்படி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் அலுவலக அறைக்கு உள்ளே சென்ற போது திருமதி. ரதி (எ) லட்சுமி அவர்கள் அவர்களது அலுவலக அறையில் மேற்கு புறம் பார்த்து அமர்ந்திருந்தார். பின்னர் நான் என்னையும், என்னுடன் வந்த ஆய்வாளரையும் அறிமுகம் செய்து வைத்தேன். ஆய்வாளர் அவர்கள் அவரிடமிருந்த அடையாள அட்டையை திருமதி. ரதி (எ) லட்சுமி அவர்களிடம் காட்டி அவரை அறிமுகம் படுத்தி கொண்டார். பின்னர் நான் மேற்படி திருமதி. ரதி (எ) லட்சுமி அவர்களிடம் தங்களது அறையை சோதனை செய்ய போவதாகவும், அதற்கு ஒத்துழைப்பு கொடுக்கும்படி கேட்டு கொண்டதன் அடிப்படையில், அதற்கு அவரும் ஒத்து கொண்டார். பின்னர் என்னுடைய அறிவுரையின் பேரில் ஆய்வாளரும் மற்றும் காவலர்களும் என்னுடன் சேர்ந்து அலுவலக அறையை சுமார் 14.30 மணிக்கு சோதனை மேற்கொண்டோம். நான் சோதனை மேற்கொண்டதில் மேற்படி திருமதி. ரதி (எ) லட்சுமி அவர்களின் டேபிளின் மேல் இருந்த ரெக்ஸின் கை பையின் நடு ஜிப்பை திறந்து பார்த்த போது அதனுள் ஐநூறு நோட்டுகள் அடங்கிய கட்டு ஒன்று இருந்தது, அதை நான் எடுத்து மேற்படி திருமதி. ரதி (எ) லட்சுமி மற்றும் ஆய்வாளர் முன்னிலையில் ஆய்வு செய்த போது அதில் (1) 500 x 47 = 23,500/-, (2) 100 x 1 = 100/-, (3) 50 x 1 = 50, (4) 20 x 2 = 40, (5) 10 x 1 = 10 மொத்தம் ரூ.23,700/– இருந்தது. அதனை நான் ஆய்வாளர் மற்றும் மேற்படி திருமதி. ரதி (எ) லட்சுமி அவர்கள் முன்னிலையில் கைப்பற்றி கொண்டேன். பின்னர் நான் மேற்படி அறையில் திருமதி. ரதி (எ) லட்சுமி அவர்களுக்கு முன்பு இருந்த பென்ஜில் டி கப்புகள் இருந்த தெர்மோகோல் பெட்டியை சோதனை செய்ததில் அதில் (1) 2000 x 1 = 2000, (2) 500 x 18 = 9,000/-, (3) 100 x 7 = 700/- ஆக மொத்தம் ரூ.11,700/– இருந்தது. அதனை நான் ஆய்வாளர் மற்றும் மேற்படி திருமதி. ரதி (எ) லட்சுமி அவர்கள் முன்னிலையில் கைப்பற்றி கொண்டேன். மேற்படி திருமதி. ரதி (எ) லட்சுமி அவர்கள் அலுவலக அறையில் சோதனை செய்ததில் ரூபாய். 35,400/– இருந்ததை கைப்பற்றி, பின்னர் மேற்படி பணம் பற்றி திருமதி. ரதி (எ) லட்சுமி அவர்களிடம் விசாரித்த போது செலவுக்கு வைத்திருந்ததாக கூறினார். பின்னர் அலுவலகத்தில் இருந்த அனைத்து பகுதிகளிலும்

சோதனை செய்யப்பட்டது. மேற்சொன்ன சோதனை பகுதிகளில் எந்தவொரு சந்தேகப்படும் படியான ஆவணமோ, பொருளோ கிடைக்கவில்லை. பின்னர் ஆய்வாளர் முன்னிலையில் நான் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் அலுவலக பக்கத்து அறையில் இருந்த ஏற்கனவே திருமதி. ரதி (எ) லட்சுமி அவர்களை அலுவலகத்தில் சந்தித்துவிட்டு வந்த மூன்று நபர்களை மீண்டும் விசாரணை செய்த போது அவர்கள் 1) M. அசோகன், வயது 57/2018 த/பெ மாயவேல், விடுதி காப்பாளர், ஆதிதிராவிடர் அரசு மாணவர் விடுதி, ஆவினங்குடி, வீட்டு முகவரி : கிழக்கு தெரு, கண்டப்பன்குறிச்சி, நகர் அஞ்சல், வேப்பூர் தாலுக்கா, கடலூர் மாவட்டம், 2) K. அறிவழகன், வயது 51/2018, த/பெ கெங்காசலம், விடுதி காப்பாளர், ஆதிதிராவிடர் அரசு மாணவர் விடுதி, மா.புடையூர், வீட்டு முகவரி : 27,பழைய EB ஆபிஸ் தெரு, ஆபத்தாரணபுரம், வடலூர், கடலூர் மாவட்டம், 3) C.கணேசமூர்த்தி, வயது 47/2018, த/பெ சின்னசாமி, விடுதி காப்பாளர், ஆதிதிராவிடர் அரசு மாணவர் விடுதி, தீவலூர், வீட்டு முகவரி : 66,இரண்டாவது குறுக்கு தெரு, சரோஜினி நாயர் நகர், விருத்தாசலம் என தங்களை அறிமுகப்படுத்தி கொண்டனர். அதில் இருந்த விடுதி காப்பாளர் அசோகன் என்பவரை விசாரித்ததில் அவர், எங்களது விருத்தாசலம் கோட்டத்தில் உள்ள 27 ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகளுக்கு கடந்த மாதம் இறுதியில் (தேதி சரியாக ஞாபகம் இல்லை) மாணவர்களுக்கான உணவு கட்டணம் கொடுக்கப்பட்டது என்றும், அந்த உணவு கட்டணத்திற்காக அரசால் கொடுக்கப்பட்ட செலவு தொகையில் ரூபாய்.35,000/—த்தை எடுத்து இன்று தானும் கணேசமூர்த்தியும் லஞ்சமாக மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.ரதி (எ) லட்சுமி அவர்களை சந்தித்து கொடுத்ததாக கூறினார். பின்னர் அசோகன் என்பவருக்கு அருகில் இருந்த அறிவழகனை விசாரித்ததில் அவர், தன்னிடம் ரூ.8,000/— இருப்பதாகவும், அதனை விருத்தாசலம் கோட்டத்தில் இருந்து இன்னும் சில விடுதி காப்பாளர்கள், திருமதி. ரதி (எ) லட்சுமி அவர்களை சந்திக்க சிலர் வந்து கொண்டிருப்பதாகவும், அவர்களுடன் சேர்ந்து, நான் ஏற்கனவே எனது விடுதிக்கு உணவு கட்டணத்திற்காக அரசால் கொடுக்கப்பட்ட செலவு தொகையில் ரூ.8,000/— த்தை லஞ்சமாக, இன்று திருமதி. ரதி (எ) லட்சுமி அவர்களிடம் கொடுக்க இருப்பதாக கூறி அப்பணத்தை ஆஜர் செய்தார். நான் மேற்படி பணத்தை பெற்று ஆய்வு செய்ததில் அதில் 500 x 16 = ரூ.8,000/- இருந்தது. இந்த தொகையை விசாரணைக்காக ஆய்வாளர் முன்னிலையில் கைப்பற்றி கொண்டேன். இந்த திடீர் ஆய்வு மகஜர் மாலை சுமார் 16.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமாக சட்ட பூர்வ நடிவடிக்கை எடுக்க வேண்டி, திடீர் ஆய்வின் போது அசல் மகஜர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.43,400/—யை இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்படுகிறது. மேலும் இது சம்மந்தமாக பதிவு செய்யும் வழக்கின் விவரம் பின்னர் தெரியப்படுத்துமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள கையொப்பம் R.கீதா, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம். அய்யா, நான் இன்று 05.01.2018 இரவு 22.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனுவை பெற்று, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/2018 u/s 7 and 13 (2) r/w 13 (1) (d) of The Prevention of Corruption Act, 1988ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதன் அசல் நகலையும், வாதியின் புகார் மனுவையும், வழக்கின் சொத்தையும் இணைத்து தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து அனுப்பப்படுகிறது.

(D.சண்முகம்)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
விழுப்புரம்.